TAMIL NADU LEGISLATURE LIBRARY
19 JAN 1983
MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1982 செப்டம்பர் 7

ஆவணி 22, துந்துபி— திருவள்ளுவர் 2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்

''அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்''

இது செய்வதற்கு அருமையானது என்று சோர்வுறாமல் இருக்க வேண்டும். அதை அரிய முயற்சி செய்து முடித்து விட்டால், அதனால் பெருமை உண்டாகும்.

I. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

கந்திலியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 1—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வடாற்காடு மாவட்டம் கந்திலியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக அமைக்கவிருக்கிற துணை மின்நிலையம் எத்தனை கிலோவாட் மின் நிலையமாக அமையும். அதனுடைய மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் துணை மின்நிலையத்தின் மதிப்பீடு 39.76 லட்சம். 1982—83 ஆம் ஆண்டில் துவங்கி முடிக்க திட்டமிடப் பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 7½ எம். வி. ஏ. நிறைவு செய்ய திட்டம் உள்ளது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு ஏதாவது காரணத்தை வைத்து ஆரம்பிக்கிறதா? அப்படி காரணம் இருந்தால், கோவை மாவட்டத்தில் அடிக்கொரு தடவை மின் தடை ஏற்படுகிறது. தொழில்கள் நிரம்பப் பெற்றிருக்கிற நகரமாக இருப்பதால், அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, காரணங்கள் இல்லாமல் எந்தக் காரியமும் நடைபெறுவது இல்லை. கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையம் அமைக்க ஆற்காடு தொகுதியில் கண்ணியனூர் கிராமத்தில் இடம் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் வந்து அதனை சர்வே செய்ததாகவும் கேள்விப்பட்டேன். ஆகவே, அமைக்கப்படவிருக்கும் துணை மின் நிலையத்தை திமிரி ஒன்றியத்தில் அரசு அமைக்கவிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்த விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

மதுரை மாநகராட்சியில் புதிதாக சேர்ந்துள்ள பகுதியில் மின் இணைப்புப் பெறுவதற்கான அரசின் அனுமதி.

* வினா எண் 2—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை மாநகராட்சியில் புதிதாக சேர்ந்துள்ள பகுதியில் வசிப்பவர்கள் மின் இணைப்புப் பெற அரசிடம் விசேட அனுமதி பெற வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகள், இந்திய மின்சாரச் சட்டம் 1910, பிரிவு 3—ன் கீழ் மின்சாரம் வழங்க, மதுரை மாநகராட்சிக்கு அளிக்கப்பட்டுள்ள மின் திட்டப்பகுதிகளுக்கு வெளியில் இருக்குமானால், இந்திய மின்சாரச் சட்டம் 1910, பிரிவு 27-ன் கீழ், மின் இணைப்பு வழங்குவது சம்பந்தமான வேலைகள் செய்யவும், மின் இணைப்பு வழங்கவும், மாநகராட்சி மாநில அரசின் தனி அனுமதியை பெற வேண்டும். புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகள், மாநகராட்சியின் மின் திட்டப்பகுதிக்குள் இருக்குமானால், மாநில அரசின் அனுமதி பெற அவசியமில்லை.